திருவாசகம் - 35



# அச்சப்பத்து கதைவடிவில்

கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# அச்சப்பத்து கதை வடிவில்

# ஆனந்தம் உறுதல்

# தில்லையில் அருளியது

**புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும்**

**அஞ்சேன் கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம்**

**நண்ணி மற்றும்ஓர் தெய்வந் தன்னை உண்டென**

**நினைந்தெம் பெம்மாற்கு அற்றிலா தவரைக் கண்டால்**

**அம்மநாம் அஞ்சு மாறே. 01**

ஆச்சிரமத்தில் ஒரு நாகபாம்பு வசித்து வந்தது. அது ஒரு வருடத்திற்கு சிலமுறை வந்து சிவன்கோவிலின் கர்ப்பக்கிருகத்துள்ச் சென்று சிவலிங்கத்தின் மீது ஏறி ஊர்ந்து செல்லும். ஆச்சிரமத்திற்கு வருபவர்கள் பால் வைப்பர். ஆனால் அது ஒருபோதும் குடித்ததில்லை.

அன்று பிரதோச விரத நாள். அன்று மாலை ஏராளமான மாணவர்கள் ஆச்சிரமத்திற்கு வந்திருந்தனர். அவர்களுடன் பெற்றோரும், ஊரவரும் வந்திருந்தனர். யாரும் சிவன்கோவில் பக்கம் செல்லாது தூர நின்றனர். சிலர் சிவனே வந்துவிட்டதாக கூறிக் கற்பூரம் கொழுத்தி வணங்கினர். சுவாமியார் அதன் அருகே வந்தார். அது படமெடுத்தது. மாணவர்களில் சிலர் அழத் தொடங்கினர். அங்கு அல்லோல-கல்லோலகமாக இருந்தது. அப்போது நல்லைநாதனும் கதிரேசனும் வந்தனர். பாம்பு வந்ததால் அங்குள்ளவர்கள் கலவரப்பட்டுக் கொண்டிருந்ததை அறிந்த கதிரேசன் அதன் அருகில் வந்தார்; “நாகமே இன்று பிரதோச விரத நாள் அதற்காக வந்தால் சிவனை வணங்கி விட்டுக் காட்டுக்குப் போ. நீ நல்லவன் என்று எனக்குத் தெரியும். பாவம் சிறுவர்கள் பயந்து அழுகிறார்கள். இங்கிருந்து போ?” என்றார். முன்பென்றால் அது கதிரேசன் சொன்னதும் சென்று விடும். ஆனால் அன்று செல்ல மறுத்தது. “நீ போகாவிட்டால் என்ன செய்வேன் தெரியுமா..? போய்விடு” அதட்டினார் கதிரேசன்.

சிறுவர்கள் பலர் அது படமெடுத்து ஆடுவதைப் பார்த்துப் பயந்தனர். அவர்களது பெற்றோர் அவர்களை வீட்டுக்கு அழைத்துச் செல்ல விரும்பினர்; “சரி போக

விரும்பமில்லாவிட்டால் உன்னை என்ன செய்வேன் தெரியுமா..? என்று கேட்டவாறு அதன் அருகில் சென்று ஒரு கம்பால் அதைத் தூக்கினார். அது அக்கம்பில் சுருண்டு படுத்தது. அதைக் கொண்டுபோய் தூரத்தில் விட்டார் கதிரேசன்.

"பாம்பைத் துரத்துவதை விட்டுத் தூக்கிச் செல்கிறீர்கள். தற்செயலாக கடித்தால் என்ன செய்வது?" நல்லைநாதன் கேட்டார். "அது கடிக்காது. தினமும் நந்தவனத்திற்கு அது வரும். நான் பூப்பறிப்பேன். அது பேசாமல் சுற்றித் திரியும். இடைக்கிடை கோவிலுக்கும் வரும். கடிப்பதானால் எத்தனை பேருக்குக் கடித்திருக்கும். வீணாகப் பயப்படாதே. சிவனின் ஆபரணம் அது. எதுவும் செய்யாது. அதனால் அதற்கு நான் அஞ்சுவதில்லை. பொய்யர்களது வார்த்தைகளையும் நம்பமாட்டேன். எனது அண்ணலான சிவன் இருக்கும் வரை யான் எதற்கும் பயப்படமாட்டேன் ஆனால் சிவனைப் பற்றிக் கற்றறியாத துரைசிங்கம் போன்றவர்களுக்குத் தான் எனக்குப் பயம். கற்றும் சிவனைப் பற்றியறியாது நூறு இருநூறு ஆண்டுகளுக்கு முன் சிவனுக்கென மக்கள் கொடுத்த காணிகளை அபகரித்துத் தனது பெயரில் கள்ள உறுதி முடித்து வைத்திருக்கும் சிலருக்குத் தான் நான் பயப்பிடுகிறேன். அவர்கள் சிவனை மதியாது எதையும் செய்வர்" என்றார் கதிரேசன்.

**வெருவரேன் வேட்கை வந்தால் வினைக்கடல் கொளினும்**

**அஞ்சேன் இருவரால் மாறு காணா எம்பிரான் தம்பிரா னாம்**

**திருவுரு அன்றி மற்றோர் தேவரெத் தேவ ரென்ன**

**அருவரா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே 02**

"நல்லை, நீயும் மகாலிங்கமும் துரைசிங்கத்தின் காணியை வாங்கச் சொன்னபோது நான் ஏன் மறுத்தேன் என்பது உனக்கு இப்போதும் புரியவில்லையா ....? பலர் சிதம்பரத்திற்கென காணிகளை எழுதி வைத்தனர். முன்பு அதற்குப் பொறுப்பாகச் சிதம்பரக்கோவில் முகாமை ஒருவரை நியமித்தது. இங்கு பெரும்போர் நடைபெற்றமையால் சிதம்பரத்திற்கும் இங்குள்ளவர்க்கும் உள்ள தொடர்புகள் அறுந்துவிட்டது. இங்கு அதைப் பராமரித்தவர் அதைத் தனது பெயருக்கு எழுதிவிட்டார். அப்படி எழுதியவரின் பிள்ளை தான் துரைசிங்கம். இப்போ ஊரவர் சிலர் துரைசிங்கத்திற்கு எதிராகப் புகாரிட்டமையால் அவர் செல்ல வேண்டிய நாட்டிற்குச் செல்ல முடியாதுள்ளது. காமமும் கர்மமும் பெருங்கேடு விளைவிக்கின்றன. பூமணிக்குப் பிறந்த ஒரு பிள்ளை துரைசிங்கத்திற்குத் தான் பிறந்ததென்று ஊரவர் பெரிதாகக்

கூறுவர். அவனுக்குப் பிறந்த சிவலோகநாதனை ஊரவர் ஏவி விட அவன் குடித்துவிட்டுச் சென்று தனக்குக் காணி தரும்படி சண்டையிடுகிறான். செய்தவினை இப்போது சூழ்ந்து விட்டது. காமத்தை விட தீய செயல்கள் பெருங் கேட்டை விளைவிக்கும். அதைவிட பெருங் கேட்டை விளைவிப்பது கடவுளை நிந்திப்பது. தாய்க்குப் பிள்ளை எவ்வளவு முக்கியமோ அது போல எமது குலதெய்வமான சிவன் எமது ஊரவர்க்கு பெரியவன். தாய் போன்றவன். சிவன்கோவில் குருக்களோடும், நிர்வாகத்துடனும் அவன் பிரச்சினைப்படாத நாளே இல்லை. மகாலிங்கம் இப்பவும் குடிக்கிறான். கலையரசியோடு தொடர்பு வைத்திருக்கிறான் என்று கூறித் திரிகிறான். ஒருவன் தீயவனாகவோ அல்லது காமம் பிடித்தவனாகவோ இருந்தால் அவன் அதன் தார்ப்பரியத்தை உணர்ந்து திருந்தக்கூடாதா…? ஆணவமிடுக்கில் செய்வதையெல்லாம் அனுபவிக்க வேண்டும் என்று பலர் நினைப்பதில்லை. இதற்காகத் தான் சிவனை புகழ்ந்து பாடிய மாணிக்கவாசகர் இவ்வாறான செயல்களைச் செய்யாது சிவனை வணங்குங்கள் என்று திருவாசகத்தில் கூறுகிறார்" என்றார் கதிரேசன்.

**வன்புலால் வேலும் அஞ்சேன் வளைக்கையார் கடைக்கண்**

**அஞ்சேன் என்பெலாம் உருக நோக்கி அம்பலத் தாடுகின்ற**

**என்பொலா மணியை ஏத்தி இனிதருள் பருக மாட்டா**

**அன்பிலா தவரைக் கண்டாதல் அம்மநாம் அஞ்சு மாறே 03**

"சிவநிந்தனை என்பது கொலைக்கருவிகளால் வருகின்ற துன்பத்தை விட மேலானது. வளையல்களை அணிந்த மாதர்களின் காமப் பார்வைக்கும் அஞ்சமாட்டேன். என் எலும்புகள் உருகும்படியாக என்னை நோக்கி அருள் செய்யும் அம்பலத்தில் ஆடுகின்ற சிவனின் மீது அன்பில்லாதவரைக் கண்டு தான் அஞ்சுவேன்" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். கொலைக்கருவியை வைத்திருப்பவனோடு முரண்பட்டால் தான் அவன் சம்பந்தப்பட்டவரைத் தாக்குவான். அப்படியானவர்களைச் சிவனடியார்கள் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள். அதனால் அவர்கள் பகைவராக மாட்டார்கள் வளையலை அணிந்த பெண்களின் காமப்பார்வை அவர்களது காம உணர்வை வெளிப்படுத்தும். அவர்களைக் கண்டால் சிவனடியார்கள் அவர்களைத் தாயாக நினைத்து வணங்குவர். மேற் சொன்ன இரு விடயங்களும் சம்பந்தப்படாதவரை ஒருபோதும் தாக்காது. ஆனால் உலகப்பற்று மிக்கவர்கள் எதையும் ஆராயாது தனது நலத்தையே கவனிப்பர். தமது இலாபத்திற்காக அவர்கள் எதையும் செய்வர். கடவுளை வணங்குவதே அவர்களுக்குப் பிடிக்காது. கடவுளை நம்புவதுபோலப் பாசாங்கு செய்து

தமது சொத்தைப் பெருக்கிக் கொள்வர். துரைசிங்கத்தின் தகப்பன் தான் சிதம்பர சொத்து காணிகளை நிர்வகித்தவர். தீட்சை பெற்றமையால் சிவபூசை செய்து முக்குறியாக நீறணிந்து ஊரவரை ஏமாற்றிச் சிவன்கோவில் முகாமையாளராக வந்து சிவன்கோவிலுக்குப் பிள்ளைகள் இவல்லாதவர்கள் எழுதிய காணியைத் தனதாக்கியவர் அவர். சிவபக்தராக வாழ்ந்த சிவநேசனுக்கு எவ்வளவு கொடுமைகள் செய்தான் என்று உனக்குத் தெரியும். தெரிந்தும் அவனுக்காகக் கதைக்க வந்துவிட்டாய்" என்றார் கதிரேசன்.

**கிளியனார் கிளவி அஞ்சேன் அவர்கிறி முறுவல் அஞ்சேன்**

**வெளியநீ றாடும் மேனி வேதியன் பாதம் நண்ணித்**

**துளியுலாம் கண்ணராகித் தொழுதழு துள்ளம் நெக்கிங்கு**

**அளியிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே 04**

"நல்லை, மாணிக்கவாசகர் கூறியவற்றை நீ சுவாமியார் சொல்லக் கேட்டுள்ளாய். அதன்படி வாழ்ந்தும் வருகின்றாய். சிவபக்தர்கள் கிளியைப் போன்ற அழகிய பெண்களின் இனிமையான மயக்குமொழிகளை நம்பமாட்டார்கள். அதை ரசிக்கவும் மாட்டார்கள். அதைவிட விரும்பவும் மாட்டார்கள். அப்படியான சிவனேசன் ஆசிரியரைத் துரைசிங்கத்தின் தகப்பன் துன்பப்படுத்தியவர். பக்தியின் மேல்நிலையில் இருந்த அவர் துரைசிங்கத்தின் முகாமையில் இருந்த பாடசாலையில் கற்பித்தவர். அவர் பக்திமான். அவரது நேர்மையான குணத்தால் பலவிடங்களில் துரைசிங்கத்தின் தகப்பன் பாதிக்கப்பட்டவர். அதனால் எதையும் சொல்லமுடியாத துரைசிங்கத்தின் தகப்பன் திருமணமாகிக் குடும்பத்துடன் வாழ்ந்த சிவகாமி ஆசிரியைக்குச் சிவநேசனுடன் கள்ள உறவு உள்ளதென்று கல்வி அதிகாரிக்குக்கூற அவர் சிவநேசனை இடமாற்றம் செய்தவர். அது உண்மையென்று அவளது கணவனை நம்பவைத்து அவர்களின் குடும்பத்தைத் துரைசிங்கத்தின் தகப்பன் குலைத்தவர். இப்படியாகப் பலவற்றைச் சொல்லலாம். இப்படியானவர்களுக்கு அஞ்ச வேண்டும் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அப்படியிருக்க நீ எப்படித் துரைசிங்கத்துக்காகக் கதைப்பாய்" என்று கேட்டார் கதிரேசன்.

**பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்**

**துணிநிலா அணியினான்தன் தொழும்பரோடழுந்தி அம்மால்**

**திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீறுஅணிகிலா**

**தவரைக்கண்டால் அம்மநாம்அஞ்சு மாறே. 05**

“நல்லை, நீ சிவபக்தன். சிவசின்னங்களை முழுமையாக அணிபவன். மகாலிங்கமும் சிவபக்தனாகி இப்போது சிவசின்னங்களை அணிந்துள்ளான். இச் சிவசின்னங்கள் உடலையும், மனதையும் சுத்தப்படுத்தி அணிபவனைப் புனிதனாக்கும் என்ற நோக்குடன் தான் முன்பு வாழ்ந்த ரிஷிகள், ஞானிகள், முனிவர்கள், நாயன்மார்கள் சிவசின்னங்களை அணியும்படி கூறினார்கள். அவை புனிதமானவை. தீயசெயல்களைச் செய்வோர், தீயவற்றை எண்ணுவோர் அவற்றை அணிந்தால் பாவமும் பழியும் தான் உண்டாகும். மகாலிங்கத்திற்கு இவை தெரியாமையால் சில நேரங்களில் பிழை விடுகிறான். அது இயல்பு. அதை மன்னித்துச் சொல்லித் திருத்துதல் வேண்டும். நீ அப்படி அல்ல. ஐம்பது வருட காலமாகச் சிவனை வணங்குகிறாய். இதை உனக்கு மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டுமா…? சிவன் வேறு, சிவசின்னங்கள் வேறு அல்ல. நாம் சிவநினைப்புடன் சிவனோடு இருப்பதாக நினைத்தே சிவ சின்னங்களை அணிகிறோம். அவற்றை அணிந்துவிட்டு மதுவை, மாமிசத்தை உண்பதும், அதன் வீரியத்தால் தீயவற்றைச் செய்வதும் சிவனடியார்களின் செயலாகுமா..? நீ செய்யவில்லை. ஆனால் செய்பவரின் உறவு உனக்கிருக்கிறது. மாணிக்கவாசகர் தீயவை எதற்கும் நான் அஞ்சமாட்டேன். ஆனால் சிவனை வணங்காதவரைக் காணவும் விரும்பமாட்டேன். உறவும் வைக்கமாட்டேன் என்று கூறுவதை எப்படி உன்னால் மீற முடிகிறது” என்று கேட்டார் கதிரேசன்.

**வாளுலாம் எரியும் அஞ்சேன் வரைபுரண் டிடினும் அஞ்சேன்**

**தோளுலாம் நீற்றன் ஏற்றன் சொற்பதம் கடந்த அப்பன்**

**தாளதா மரைகளேத்தித் தடமலர் புனைந்து நையும்**

**ஆளலா தவரைக் கண்டால் அம்மநாம்அஞ்சு மாறே. 06**

கதிரேசன் சொன்னார்; “மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார், “உலகம் முழுவதும் எரியுண்டு நான் அதற்குள் அகப்பட்டாலும் அஞ்சேன். பெருமலை என்மீது சரிந்து விழுந்தாலும் அஞ்சமாட்டேன். நீறணிந்தவனும் எருதை வாகனமாகக் கொண்டவனுமான சிவன் என்னுடன் இருக்கையில் நான் ஏன் அஞ்சவேண்டும். இறைவனுக்காக மலர்களைக் கொய்துபோடும் எனக்கு இடரேதும் வராது. ஆனால் சிவனைப் பூக்களால் அர்ச்சிக்காதவனைக் கண்டால் அஞ்சுவேன். ஏனென்றால் அவன் சிவனில்லாத மனதை உடைய பேய் அவன். அவனைக் காணுதல் பாவம்” என்கிறார். துரைசிங்கம் பூ கொய்து வணங்கத் தகுதியுடையவனா..? மாமிசமும் மதுவும் உண்பவன் எப்படிப் பூக்கொய்து சிவனுக்குச் சூட்டுவான். தூய்மையான உடலும், உள்ளமும்

உள்ளவன்தான் சிவனை வணங்கத் தகுதியுள்ளவன். ஒரே சாதியில் பிறந்தாலென்ன, கூடப்பிறந்த சகோதரமாக இருந்தாலென்ன, பெற்றோராக இருந்தாலென்ன சிவனை வணங்காவன் கொடியவன். அவனோடு உறவு கொள்வதே பாவம். அப்படியிருக்க நீ எப்படித் துரைசிங்கத்தோடு கதைப்பாய்" என்று கேட்டார் கதிரேசன். நல்லைநாதனால் அவரது கேள்விகளுக்குப் பதில்கூற முடியவில்லை.

**தகைவிலாப் பழியும் அஞ்சேன் சாதலை முன்னம் அஞ்சேன்**

**புகைமுகந் தெரிகை வீசிப் பொலிந்த அம்பலத்து ளாடும்**

**முகைநகைக் கொன்றைமாலை முன்னவன் பாதமேத்தி**

**அகம்நெகா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. 07**

கதிரேசன் நல்லைநாதனுக்குச் சொன்னார்; "மாணிக்கவாசக சுவாமிகள், "என்னோடு சம்பந்தமில்லாத பழியை யாராவது என்மீது சுமத்தினாலும் நான் அஞ்சமாட்டேன். சாவதற்கும் அஞ்சமாட்டேன். நான் செய்யாத பழியை என்மீது சுமத்தச் சிவன் விடமாட்டான். நான் சாகவும் மாட்டேன். ஏனென்றால் நான் சிவனது திருவடியைத் தான் அடைய விரும்புகின்றேன். அதனால் எனக்கு மரணபயம் இல்லை. எரியும் தணலையொத்த சிவந்த நிறத்தையுடைய சிவன் என்னைக் கைவிடமாட்டான் என்கிறார். அத்துடன் தனித்துச் சிவனை வணங்குவதை விடப் பலர் சேர்ந்து கூட்டாக வணங்குவது நல்ல பயனைத் தரும். ஆனால் சிவனை வணங்குபவர்களைப் பைத்தியகாரர் என்று சொல்வாரும் உண்டு. உன்னைத் துரைசிங்கம் அதற்காகத் தான் பித்துப்பிடித்தவன் என்று சொல்பவன். அவர்களுக்குப் பயந்து தமது செயற்பாடுகளை மாற்றுவது பெருங் கேட்டைத்தரும். உனது தந்தையும் சிவலிங்கத்தினது தந்தையும் கூடப்பிறந்த சகோதரர்கள். அதற்காக அவன் செய்யும் தீயசெயல்களை நீ கண்டிக்காதிருப்பது பாவமல்ல. அவனுக்காகப் பரிந்து பேசுவதுதான் பாவம். சிவச்சொத்தை அபகரித்த அவனைப் பார்ப்பதே பாவம். அப்படியிருக்க நீ அவன் கள்ள வழியில் சேர்த்த சொத்தை என்னை வாங்கச் சொல்கிறாய். இதன் நோக்கம் என்ன…? சிவனை மறந்து விட்டாயா…?"

**தறிசெறி களிறும் அஞ்சேன் தழல்விழி உழுவை அஞ்சேன்**

**வெறிகமழ் சடையன் அப்பன் விண்ணவர் நண்ண மாட்டாச்**

**செறிதரு கழல்கள் ஏத்திச் சிறந்தினி திருக்கமாட்டா**

**அறிவிலா தவரைக் கண்டால் அம்மநாம்அஞ்சு மாறே. 08**

“நல்லை கட்டுத்தறியைப் பிரித்துவிட்டுச் செல்லும் மதயானைக்கும் நான் அஞ்சமாட்டேன். நெருப்பைப் போன்ற சிவந்த கண்களையுடைய கொடிய புலிக்கும் அஞ்சமாட்டேன். மணங்கமளும் பூக்களை அணிந்த சடையையுடைய சிவனை விண்ணவர்கள் தொழாவிட்டாலும், நான் மதிக்க மாட்டேன். அதனால் சிவனை வணங்கும் விவேகம் உடையவரின் உறவைத்தான் நான் விரும்புகிறேன். விவேகமில்லாதவர்கள் சிவனை வழிபடாதவர்களே. அதனால் அவர்களது உறவு எனக்குத் தேவையில்லை. விவேகமுள்ளோர் யானைக்கும் புலிக்கும் அஞ்சமாட்டார்கள். அவர்கள் விவேகமற்றவர்களின் உறவை விரும்பமாட்டார்கள். உனக்கு எல்லாம் தெரியும். அப்படியிருக்க எப்படி என்னைத் துரைசிங்கத்தின் நிலத்தை வாங்கச் சொல்வாய். நான் எனது நிலத்தையே விற்கச் சொன்னவன் என்பதை நீ அறியவில்லையா…? இது சிவனை வணங்கிக் கொண்டும், சிவவேடம் போட்டுக் கொண்டும் ஏமாற்றுபவர்களின் பக்கம் நீ சாய்ந்தமையால் நான் இனி உன்னுடன் பேசமாட்டேன்” என்றார் கதிரேசன்.

**மஞ்சுலாம் உருமும் அஞ்சேன் மன்னரோ டுறவும் அஞ்சேன்**

**நஞ்சமே அமுத மாக்கும் நம்பிரான் எம்பிரானாய்ச்**

**செஞ்செவே ஆண்டு கொண்டான் திருமுண்டம் தீட்ட மாட்டாது**

**அஞ்சுவா ரவரைக் கண்டால் அம்மநாம்அஞ்சு மாறே. 09**

“நல்லை, மாணிக்கவாசகசுவாமிகள் சொன்னதுபோல நான் இடிமின்னலுக்கும் அஞ்சமாட்டேன். மன்னரைப் பகைக்கவும் அஞ்சேன். ஏனென்றால் நஞ்சை அமிர்தமாக்கிப் பருகிய என்தலைவன் என்னை ஆண்டுகொண்டதால் எதற்கும் அஞ்சமாட்டேன். நீற்றை மூன்றுவரிகளாகப் பூசிவிட்டால் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. நீ நீற்றை மூன்றுவரியில் பூசிவிட்டு சிவத்துரோகம் செய்யும் துரைசிங்கத்திற்கு அஞ்சுகிறாய். சிவனை வணங்காதவரும், சிவனை வணங்குவது போலப் பாசாங்கு செய்பவர்களும் எதற்கும் உதவமாட்டார்கள். அப்படியான கொடியவர்களுக்குத்தான் நான் அஞ்சுவேன்.” என்று மாணிக்கவாசக சுவாமிகளின் கூற்றை மெய்கூறெனக் கருதிவாழும் நான் சிவனடியார்களையும், சிவனையும் தான் நம்பி வாழ்ந்தேன். தற்போதைய சூழ்நிலையில் சிவனடியார்களையும் ஆராயாது நம்பிவிட்டேன்” என்றார் கதிரேசன்.

**கோணிலா வாளி அஞ்சேன் கூற்றவன் சீற்றம் அஞ்சேன்**

**நீணிலா அணியினானை நினைந்து நைந்துருகி நெக்கு**

**வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின்றேத்த மாட்டா**

**ஆணலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. 10**

"மாணிக்கவாசக சுவாமிகள் பூமியில் வாழும் மக்கள் நலமாகவும், இன்பமாகவும் வாழவேண்டும் என்பதற்காகத் தான் திருவாசகத்தைப் பாடினார். அதனால் மெய்யுணர்ந்தோர் திருவாசகத்திற்கு உருகாதார் வேறு எவ்வாசகத்துக்கும் உருகார் என்றனர். திருவாசகம் சிவன் மாணிக்கவாசக சுவாமிகளின் உருவில் வந்து பாடியது. அதனால் அதில் சொல்லப்படாத விடயங்கள் எதுவும் இல்லை. துன்பங்கள் ஏன் வருகின்றன. அதை எவ்வாறு நீக்கி இன்பத்தைப் பெறலாம் என்று அவர் மிகவும் விரிவாகவும், அழகாகவும் கூறுகிறார். அதை நம்பி அதன்படி வாழ்பவர்களுக்கு ஒரு போதும் துன்பம் வராது. இவையெல்லாம் தெரிந்த நீ உனது நன்மையை மட்டும் நினைத்தமையால் சாதாரணமான மனிதனை விடக் கீழான நிலைக்கு வந்துவிட்டாய். அது நீ இன்னும் பற்றுள்ளவன் என்பதையே எடுத்துக் காட்டுகிறது. பற்றுள்ளவன் தீய செயல்களை அஞ்சாது செய்வான். அது உன்னைப் பொறுத்தவரை உண்மையாகி விட்டது. உலகப்பற்றை அகற்றிச் சிவன்மீது பற்று வைப்பவன் கொடிய ஆயுதங்களுக்கும் அஞ்சமாட்டான். யமனுக்கும் அஞ்சமாட்டான். அஞ்சாது சிவனை வணங்கி அவருக்கு அடிமையாவான். அஞ்சுபவன் பதட்டத்துடனும், பற்றுக்களுடனும் வணங்குவான். நீ துரைசிங்கத்திற்கும், அவனது ஆயுதக்குழுவுக்கும் அஞ்சுகிறாய். நெருங்கிய உறவு இல்லாமற் போய்விடும் என்று அஞ்சுகிறாய். இவற்றிற்கெல்லாம் அஞ்சுபவனுக்குத்தான் அஞ்சுவேன். அவனது சகவாசம் நாளடைவில் என்னையும் கெடுத்துவிடும். சிவபெருமான் தனது திருவிளையாடலில் படுபாதகமான யாரும் செய்யத்துணியாத செயலைச் செய்தவனையும் மன்னித்து அருளியது உனக்குத் தெரியும். சிவனே மன்னிக்கும்போது நான் மன்னிக்காது விடமாட்டேன். அதனால் உன்னை மன்னிக்கிறேன். மன்னித்து விட்டேன் என்பதற்காக முன்பு இருந்த நட்பு இருக்கும் என்று நம்பாதே" என்றார் கதிரேசன்.

*திருச்சிற்றம்பலம்.*